2023 ஏப்ரல் 20]

நிச்சயமாக இதற்கென ஏதாவது ஒரு நீதிபதிக்கு அந்த அந்தஸ்தை வழங்கியிருப்பார்கள். இதுகுறித்து விசாரிக்க அவர்களுக்கு அனுமதி வழங்கியிருப்பார்கள். அவ்வாறு செய்யப்படவில்லையென்றால், அதுகுறித்து விசாரித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

195—

திருவுருவச் சிலை

***62498—திரு. கே.பி. முனுசாமி:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகமெங்கும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் திருவுருவச் சிலைகளை நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாநிலக் கல்லூரியில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளதாலும், திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவில்லமாக்கி, இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருவதாலும், தமிழகமெங்கும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய திருவுருவச் சிலைகளை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய காலத்தில் 'தமிழ்த் தாத்தா' என்று அன்போடு அழைக்கப்பட்ட டாக்டர் 'உ.வே.சா.' ஐயா அவர்கள் இல்லையென்று சொன்னால், சங்க இலக்கியங்களான மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற*

காப்பியங்கள் நமக்குக் கிடைக்கப் பெறாமலேயே போயிருக்கும். அப்படி அவை நமக்குக் கிடைப்பதற்கு அரும்பாடுபட்டவர், அய்யா 'உ.வே.சா.' அவர்கள். அவர்களுடைய திருவுருவச் சிலையை கல்வி கற்கின்ற மாணாக்கர்கள் மத்தியில் பரப்புகின்றவகையில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும், மற்ற அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், தனியார் பல்கலைக்கழகங்களின் வளாகத்திலும், அவருடைய திருவுருவச் சிலையை அமைப்பதோடு மட்டுமல்லாமல், அண்ணா நூலகத்திலும், மதுரையில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் திருப்பெயரோடு இப்போது புதிதாக கட்டப்பட்டிருக்கின்ற அந்த நூலகத்திலும் தமிழுக்காக உழைத்து, தமிழ் மொழியை செம்மொழி ஆக்க வேண்டும் என்று நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அடித்தளம் அமைத்த அய்யா 'உ.வே.சா.' அவர்களின் திருவுருவச் சிலையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களின் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசால் தமிழ்மொழி, செம்மொழி என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் இந்த வினாவிற்கான கூடுதல் பதிலை அளிக்க விரும்புகிறேன். தமிழ்த் தாத்தா அய்யா உ.வே. சாமிநாத அய்யர் அவர்களுக்கு சென்னையில் காமராஜர் சாலையில்,மாநிலக்கல்லூரி வளாகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சிலை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, ஏற்கெனவே நான் சொன்னதுபோன்று, பாபநாசத்திற்கு அருகிலுள்ள உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம் அவருடைய நினைவு இல்லமாக மாற்றப்பட்டு, தமிழக அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனைதான். அரசின் நிதி ஆதாரத்தையும் யோசிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. தமிழ்த் தாத்தா அவர்களுடைய தமிழ்த் தொண்டை யாராலும் மறுக்க முடியாது. அவர் தமிழுக்காக அயராது பாடுபட்டவர், அதிலும், பழந்தமிழை இந்த உலகத்திற்கு அளித்தவர். எனவே, உறுப்பினருடைய யோசனையை படிப்படியாக அரசினுடைய நிதி ஆதாரத்திற்கு ஏற்ப பரிசீலிக்கலாம்.

2023 ஏப்ரல் 20]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாத்தாவினுடைய திருவுருவச் சிலை அமைக்கின்ற அதே இடத்தில், அவர் இந்தத் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை வரலாறாக கல்வெட்டில் பதித்தால், வருங்கால இளம் மாணவர்கள் அறிந்துகொள்ள இயலும். பொதுவாக, இப்பொழுது நாம் திருவுருவச் சிலைகளை பார்க்கின்றபொழுது, பெயர்களை தெரிந்துகொள்கிறோம். அவருடைய வரலாறு என்ன? அவர் இந்த நாட்டிற்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணி என்ன? அவர் எந்த வகையிலே தொண்டாற்றியிருக்கிறார் என்பது இளைஞர்களுக்குத் தெரிவது இல்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், இதுபோன்ற சிலைகளை வடிக்கின்றபொழுது, அந்த திருவுருவச் சிலையில் அவர்களுடைய செயல்பாடுகளையும், அவர்களுடைய சாதனைகளையும், அவர்கள் மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளையும் கல்வெட்டுகளாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிவதோடு மட்டுமல்லாமல், ஐயா உ.வே.சா. அவர்களுடைய அருந்தொண்டுகளை புத்தகங்களாக வடித்து அனைத்து நூலகங்களுக்கும் கொடுப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுடைய நூல்களை எல்லாம் புத்தகங்களாக வடித்து நூலகங்களிலே வழங்குவதிலே எந்த ஒரு நிதி ஆதாரமும் அரசுக்குப் பெரிதாகத் தேவைப்படாது. அது நிச்சயமாக பரிசீலிக்கக்கூடிய ஒன்று. அதே நேரத்தில், அவருடைய சிலை அமைக்கக்கூடிய இடத்திலே, கல்வெட்டு மூலமாக அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் நம்முடைய செய்தித் துறையின் சார்பிலே மானியக் கோரிக்கை அன்று காலக்கலை என்ற புத்தகத்திலே*

பக்கம் எண் 95–ல் அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் ஆற்றிய தொண்டினைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறோம். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், இதுபோன்றவர்களினுடைய புகைப்படங்களை வைத்து, அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஆங்காங்கு வைத்து, மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் மக்கள் அதிகமாக வந்து போகின்ற ஒருசில இடங்களிலே, அதையெல்லாம் ஆல்பமாக போட்டு வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதையும் நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னொரு யோசனையையும் சொல்லி, அதற்கான அனுமதியையும் தந்திருக்கிறார். ஒவ்வொரு சிலையிலும் QR code *பொருத்துகின்ற பணி விரைவிலே இன்னும் ஒரு வாரத்திற்குள் நடக்க இருக்கிறது. முதலில், ஐயன் திருவள்ளுவர் சிலையில் அந்தப் பணிகள் துவங்கி, மற்ற எல்லா சிலைகளிலும், நம்முடைய செய்தித் துறையின் சார்பிலே பராமரிக்கப்பட்டு வருகின்ற நினைவு இல்லங்கள்–ஏன் என்று சொன்னால், நினைவு இல்லங்களாக இருந்தால் பரவலாக அந்த கல்வெட்டுகளை வைக்கலாம். சிலையில் குறைந்தபட்சம் 4 இடங்களில் மட்டும்தான் அது பொருத்தமுடியும். எனவே,* QR CODE *மூலமாக தமிழ்நாடு செய்தித் துறையினுடைய* website*–ல் இது ஏற்றப்பட்டும், தனித் தனியாகவும், அவர்களைப்பற்றி தெரிந்துகொள்கிற வகையிலே, சிலையினுடைய வண்ணமும் மாற்றப்பட்டு* QR CODE *பொருத்துகின்ற பணிகளும் இன்னும் ஒரு வார காலத்தில் துவங்க இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

196—

கால்நடை மருத்துவமனை

***21249—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—